**தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை - 2017**

-----------------------------------------------------------------------------------------------

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) அதிகாரச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை 2018 ஒக்தோபர் 19 ஆம் திகதி பேரவையின் தலைவருக்கு சமர்பிக்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

-----------------------------

**2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

---------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 1

(i) நியமத்தின் 132 ஆம் பந்தியின் பிரகாரம், குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 108 ஆம் பந்தியின் பிரகாரம், நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு பொருத்தமான முறையில் மொத்த வருமானத்தின் துணை வகைப்படுத்தலானது நிதிச் செயற்திறன் கூற்றின் முகப்பில் அல்லது குறிப்புக்களில் முன்வைக்கப் படவேண்டுமென்ற போதிலும், மீளாய்வாண்டிற்காக பதிவுக் கட்டணங்களாக பெறப்பட்ட ரூபா 21,944,000 தொகையான வருமானம் வகைப்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 7

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் தளபாடம் மற்றும் பொருத்துக்கள், அலுவலக உபகரணம் மற்றும் கணினிகளை உள்ளடக்கிய அனைத்து நடைமுறை அல்லா சொத்துக்களும் ஒவ்வொன்றும் 5 சதவீதத்தால் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

தனியார் மருத்துவ நிறுவனங்களின் பதிவுசெய்தல் கட்டணங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை மற்றும் அதற்கு பதிலாக காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தன.

#### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,107,445 தொகையான பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் பேரவையின் 09 உத்தியோகத்தர்கள் சார்பான பணிக்கொடை செலவு என்பன கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 கணக்காய்விக்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறை சொத்துக்களாக காட்டப்பட்டிருந்த நிதி பரிமாற்றல் கணக்கிலுள்ள மீதி ரூபா 232,400 தொகையை உறுதிப்படுத்துவதற்காக எந்தவொரு எழுத்து மூலமான சான்றுகளும் வழங்கப்படவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்க கூற்றை சமப்படுத்துவதற்காக ரூபா 309,000 மற்றும் ரூபா 45,000 தொகைகள் முறையே பண மீதிகளுடன் சேர்க்கப்பட்டும் கழிக்கப்பட்டும் இருந்தன. அடையாளம் காணப்படாத மீதிகள் பற்றிய எந்த விபரமும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

---------------------------

### 3.1 நிதி விளைவுகள்

----------------------------------

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் போதான மிகை ரூபா 2,466,375 உடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டிற்கான ஒழுங்குபடுத்தல் பேரவையின் நிதி விளைவுகளின் ரூபா 2,240,908 தொகையானது பற்றாக்குறையாக காணப்பட்டது, இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 4,707,283 ஆல் குறைந்திருந்தது. நேரடியாக வங்கிக்கு பெறப்பட்ட பதிவுக்கட்டண வருமானம் அங்கீகரிக்கப்பட்டு காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தமை காரணமாக ஆண்டிற்கான வருமானம் முறையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை, செலவுகள் ரூபா 5,962,479 ஆல் அதிகரித்திருந்தமை மேற்குறிப்பிட்ட குறைவினை பிரதானமாக பாதித்திருந்தது.